Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC.173/2024 PW-1**

Name : நந்தினி
Father / Husband name : செல்வக்குமார்
Village :
Age :
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 17.03.2025

**Accused 1 to 3 absent.**

**முதல் விசாரணை**

நான் தற்போது பாஞ்சாலம் கிராமத்தில் வசிக்கிறேன். நான் வீட்டுக்குடுத்தினம் தான். சாட்சி செல்வக்குமார் எனது கணவர். சாட்சி சுனில் எனது மூத்தாரின் மகன். சாட்சிகள் பாக்கிலட்சுமி, மேகலா ஆகியோர்கள் எனது நாத்தனார்கள். சாட்சி சத்தியா எனது ஓரவத்தி. வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 31.12.2023 ம் தேதி இரவு 9 மணிக்கு எங்கள் தெருவிலிருக்கும் பாலத்தில் புதுவருடத்தை கொண்டாடுவதற்காக ஸ்பீக்கர்பாக்ஸ் வைத்து நானும் எனது கணவரும் ஊரிலுள்ள சின்னக்குழந்தைகளுடன் பாட்டு கேட்டுக்கொண்டிருந்தோம். இது வருடா வருடம் நாங்கள் செய்துவருவது வழக்கம். எதிரிகள் விநாயகம், ஜனா, விக்கி ஆகியோர்கள் பக்கத்திலிருக்கும் விளையாட்டு மைதானத்தில் அவர்களும் ஸ்பீக்கர்பாக்ஸ் வைத்திருந்தார்கள். எனது கணவர் பாலத்துக்கட்டையில் ஸ்பீக்கர்பாக்ஸ் வைத்ததால் மைதானத்தில் ஸ்பீக்கர்பாக்ஸ் வைத்திருந்த எதிரிகள் ரோட்டின் நடுவே ஸ்பீக்கர்பாக்ஸ் வைத்திருந்தார்கள். அதற்கு எனது கணர் ஏன் பிரச்சனை செய்கிறீர்கள் என்று

கேட்டுவிட்டு ஸ்பீக்கர்பாக்ஸ் எடுத்துக்கொண்டு வீட்டிற்கு செல்லாம் என்று முற்படும்போது எதிரி விநாயகம், ஜனாவும் எனது கணவரை பொட்ட மாதிரி எதுக்கு எடுத்துக்கிட்டு போற என்று ஆபாசமாக பேசினார்கள். அப்போது சுனில் என்பவர் ஏன் எனது சித்தப்பாவை அசிங்கமாக பேசுகிறீர்கள் என்று எதிரிகளிடம் கேட்டதற்கு எதிரிகள் மூவரும் கட்டையால் சுனிலை அடித்துவிட்டார்கள். எனது கணவர் சின்னபையனை ஏன் அடிக்கிறீர்கள் என்று மடக்கச்சென்றபோது கீழே கிடந்த கருங்கல்லை எடுத்து எனது கணவரின் இடதுபக்க கண் புருவஓரத்தில் குத்திவிட்டார்கள். எதிரிகள் மூன்றுபேரும் எனது கணவரை எட்டி எட்டி உதைத்தார்கள். அக்கம் பக்கம் இருந்தவர்கள் வந்துவிட்டார்கள். கண்ணில் இரத்தம் அதிகமாக சென்றதால் நான் கணவரை அழைத்துக்கொண்டு ரோசனை காவல் நிலையத்திற்கு சென்றபோது இரத்தம் அதிகமாக கண்ணில் வந்ததால் முதலில் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு செல்லும்படி சொல்லிவிட்டார்கள். அடிப்பட்ட கணவரை நான் திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துசென்றேன். அங்கு முதலுதவி செய்து மேல்சிகிச்சைக்காக முண்டியம்பாக்கம் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றேன். அங்கு அவர் 3 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்தவரிடம் மருத்துவர்கள் சிகிச்சை அளித்தாலும் பார்வை முழுவதுமாக வராது என்று சொல்லிவிட்டதால், நாங்கள் அவரை மேல்சிகிச்சைக்காக பாண்டிச்சேரி தவளக்குப்பத்தில் உள்ள கண் மருத்துவமனையில் அவரை சிகிச்சையில் சேர்த்தேன். அதன்பின்னர் அங்கிருந்து எக்மோர் மருத்துவமனையில் அவருக்கு மேல்சிகிச்சை அளித்தோம். 4ம் தேதி

சம்பவம் குறித்து ரோசனை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் ஆவணமான புகார் என்னால் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டது தான், அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **வாதியின் கையொப்பத்துடன் கூடிய அசல் புகார் மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள். **என்னிடம் காட்டப்படும் கல்லால் தான் எதிரிகள் எனது கணவரை தாக்கினார்கள். அந்த வழக்குச்சொத்து சா.பொ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.**

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC.173/2024 PW-2**

Name : செல்வக்குமார்
Father / Husband name : சுப்ரமணி
Village :
Age :
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 17.03.2025

**Accused 1 to 3 absent.**

**முதல் விசாரணை**

நான் தற்போது பாஞ்சாலம் கிராமத்தில் வசிக்கிறேன். நான் நகராட்சியில் வேலை செய்கிறேன். சாட்சி நந்தினி எனது மனைவி. சாட்சி சுனில் எனது அண்ணன் மகன். சாட்சிகள் பாக்கிலட்சுமி, மேகலா ஆகியோர்கள் எனது அக்கா. சாட்சி சத்தியா எனது அண்ணி. வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 31.12.2023 ம் தேதி இரவு 9 - 9.30 மணியளவில் எங்கள் வீட்டின் அருகே பாலத்தில் வருடா, வருடம் நான் வழக்கமாக போடுவதுபோல் அன்றையதினமும் ஸ்பீக்கர்பாக்ஸ் போட்டு குழந்தைகள் மற்றும் பெரியவர்களுடன் பாட்டு கேட்டுக்கொண்டிருந்தோம். எதிரிகள் நான் ஸ்பீக்கர்போட்ட இடத்தில் அவர்களும் ஸ்பீக்கர் வைத்தார்கள். நான் அவர்களிடத்தில் ஏன் இவ்வாறு செய்கிறீர்கள் என்று கேட்டுவிட்டு வந்துவிட்டேன். எதிரிகள் குடித்துவிட்டு என்னை அசிங்க அசிங்கமாக பொட்ட மாதிரி போற, தேவிடியாபையா என்று அசிங்கமாக திட்டினர்ாகள். அதற்கு எனது அண்ணன் மகன் சுனில் எதிரிகளிடம் ஏன் சித்தப்பாவை அசிங்கமாக பேசுகிறீர்கள் என்று கேட்டதற்கு நீ என்னடா கேட்பதற்கு என்று சொல்லி சுனிலையும் எதிரிகள் மூன்றுபேரும் அடித்தார்கள். நான் மடக்கச்சென்றபோது விநாயகமும், ஜனாவும் அருகிலிருந்த கருங்கல்லை எடுத்து இடது கண் புருவ ஓரத்தில் அடித்துவிட்டார்கள். கண்ணிலிருந்து எனக்கு இரத்தம் வந்தது. நான் மயக்கமாகி கீழே விழுந்தவுடன் விக்னேஷ் என்னை

காலால் உதைத்தார். அக்கம் பக்கம் இருந்தவர்கள் வந்து மடக்கிவிட்டார்கள். அடிப்பட்ட என்னை எனது மனைவி திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தார். அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக முண்டியம்பாக்கம் மருத்தவமனைக்கு அழைத்துச்சென்றார். அங்கு பார்வை வராது என்று சொன்னதால், தவளக்குப்பம் அரவிந்தா மருத்துவமனையில் சென்று 10 நாட்கள் பிறகு கண்பார்வை வராது என்று சொன்னதால் எக்மோர் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்துச்கொண்டேன். இடது கண் நரம்பில் அடிப்பட்டதால் எனது இடது கண் பார்வை இழந்துவிட்டேன். சம்பவம் குறித்து எனது மனைவி ரோசனை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள். என்முன் காண்பிக்கப்படும் சா.பொ.1 ஆல் தான் எதிரிகள் என்னை தாக்கினார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.**

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால்
தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு
செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு
அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என்
முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC.173/2024 PW-3**

Name : பாக்கியலட்சுமி
Father / Husband name : அர்ச்சுணன்
Village :
Age :
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 17.03.2025

**Accused 1 to 3 absent.**

<u>**முதல் விசாரணை**</u>

நான் தற்போது பாஞ்சாலம் கிராமத்தில் வசிக்கிறேன். நான் தனியார் கம்பெனியில் வேலை செய்கிறேன். சாட்சிகள் நந்தினி, செல்வக்குமார், சுனில், மேகலா, சத்தியா ஆகியோர்கள் எனது உறவினர்கள். வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 31.12.2023 ம் தேதி இரவு 9 மணியளவில் எதிரிகள் மூன்றுபேரும் ஊரிலிருக்கும் விளையாட்டு மைதானத்தில் புதுவருடத்தை முன்னிட்டு ரேடியோ போட்டார்கள். புதுவருடத்தை முன்னிட்டு செல்வக்குமாரும், ரேடியோ பாலத்துக்கட்டையில் போட்டிருந்தார். அதை பார்த்த எதிரிகள் அவர்கள் மைதானத்தில் வைத்திருந்த ரேடியோவை ரோட்டில் கொண்டு வந்து வைத்தார்கள். செல்வக்குமார் எதிரிகளிடம் ஏன் பிரச்சனை செய்கிறீர்கள் என்று கேட்டுவிட்டு அவருடைய ஸ்பீக்கர்பாக்சை எடுத்துக்கொண்டு செல்லச்சென்றார். எதிரி விநாயகம் என்பவர் செல்வக்குமாரை தப்பான வார்த்தைகளால் பயந்துகொண்டு போகிறாயா என்று பேசினார். அதற்கு செல்வக்குமார் நான் பிரச்சனை செய்ய வரவில்லை நீங்கள் பாட்டு போட்டு என்சாய் பன்னுங்கள் என்று சொன்னார். செல்வக்குமார் கொஞ்சம் தூரம் சென்றவுடன் எதிரிகள் அசிங்கமான வார்த்தையால் பேசினார்கள். அங்கிருந்த சுனில் அவருடைய சித்தப்பாவை ஏன் அசிங்கமாக பேசிகிறீர் என்று கேட்டதற்கு விநாயகமும், ஜனாவும் சுனிலை கையால் அடித்துவிட்டார்கள். செல்வக்குமார்

மறிக்கச்சென்றபோது விநாயகமும், ஜனாவும் மைதானத்தின் அருகிலிருந்த கருங்கல் ஒன்றை எடுத்துவந்து இடது கண்ணில் அடித்துவிட்டார்கள். செல்வக்குமார் மயக்கமாகி விழுந்துவிட்டார். பின்னர் நானும் நந்தினியும் அடிப்பட்ட செல்வக்குமாரும் அடிப்பட்ட செல்வக்குமரை திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தோம். அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக முண்டியம்பாக்கம் மருத்தவமனைக்கு அழைத்துச்சென்றோம். முண்டியம்பாக்கம் மருத்துவமனையிலிருந்து தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார்கள். சம்பவம் குறித்து செல்வக்குமாரும், நந்தினியும் ரோசனை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள். போலிசார் வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.**

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால்

தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC.173/2024 PW-4**

Name : மேகலா
Father / Husband name : திருமலை
Village :
Age :
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 17.03.2025

**Accused 1 to 3 absent.**

<u>**முதல் விசாரணை**</u>

நான் தற்போது பாஞ்சாலம் கிராமத்தில் வசிக்கிறேன். நான் விவசாய வேலை செய்கிறேன். சாட்சிகள் நந்தினி, செல்வக்குமார், சுனில், பாக்கியலட்சுமி, சத்தியா ஆகியோர்கள் எனது உறவினர்கள். வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 31.12.2023 ம் தேதி இரவு 9 மணியளவில் எனது தம்பி செல்வக்குமார் எங்கள் வீட்டின் அருகே புதுவருடத்தை முன்னிட்டு ரேடியோ போட்டிருந்தார். வீட்டின் அருகேயிருந்த பிள்ளைகள் எனது தம்பி செல்வக்குமாரின் ரேடியோவை பாலத்தின் அருகே வைத்து டேன்ஸ் ஆடிவிட்டு எடுத்துச்செல்லாம் என்று வைத்தார்கள். விநாயகம் அவர்கள் வீட்டிலிருந்த ரேடியோவை எடுத்துவந்து ரோட்டில் வைத்தார்கள். அதனால் செல்வக்குமாருக்கும் விநாயகம், ஜனா, விக்னேஷ் ஆகியோர்களுக்கும் பிரச்சனை வந்தது. ஊரிலிருந்தவர்கள் வந்து இரண்டுபேரையும் கேட்டதால் செல்வக்குமார் அவருடைய ரேடியோவை எடுத்துக்கொண்டு வீட்டிற்கு வந்தார். அப்போது எதிரிகள் செல்வக்குமாரை அசிங்கமாக வார்த்தைகளால் கேட்டார். இரண்டுபேருக்கும் இடையே சண்டை வந்தது. விநாயகம், ஜனா ஆகியோர்கள் விளையாட்டு மைதானத்தில் கொட்டி வைத்திருந்த ஜல்லிக்கல்லை எடுத்துவந்து இடது கண்ணில் குத்திவிட்டார்கள் செல்வக்குமார் கீழே விழுந்துவிட்டார். விக்னேஷ் எட்டி மார்பில் உதைத்தார். அதன்பின்னர் நாங்கள் அவரை அழைத்துக்கொண்டு திண்டிவனம் அரசு

மருத்துவமனைக்கு அழைத்து வந்தோம். அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக முண்டியம்பாக்கம் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம். அங்கு கண்பார்வை வராது என்று சொன்னதால் அரவிந்தா மருத்துவமனைக்கு சென்றுவிட்டோம். அதன்பின்னர் அங்கிருந்து சென்னைக்கு அழைத்துச்சென்றோம். சம்பவம் குறித்து நந்தினி ரோசனை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள். போலிசார் வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.**

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.